RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2120

OPEN ACCESS

# திருமுருகாற்றுப்படை பகரும் மொழிப் பண்பாடும் வாழ்வியலும்

**இர. விஜயலட்சுமி [அ, *], ப. சண்முகம் [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620005, தமிழ்நாடு, இந்தியா.

# Lifestyle and Language in Thirumurugatrupadai

**R. Vijayalakshmi [a, *], P. Shanmugam [a]**

[a] Research Department of Tamil, Srimad Andavan Arts & Science College (Autonomous), Tichirappalli-620005 Tamil Nadu, India

* Corresponding Author: vijinithisri@gmail.com

Received: 26-08-2022
Revised: 30-09-2022
Accepted: 05-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature clearly reflects the lifestyle of the ancient Tamils. In the field of anthropology Tamil literature plays an important role. The richness of a country's language is judged by the richness of its literature in the regional language spoken by the people of that country. The ideas found in those literary works shapes the mind and lifestyle of both the present and future generation too. Thirumurugatrupadai which is one among the Pattuppattu (anthology) is about a person who is blessed by the lord Murugan, comforting another servant to Murugan. In this text author Nakkiranar has sung songs in six sections about the places where Murugan used to stay such as Tiruparanguntram, Tiruchendur, Palani, Swamimalai, Palamuthircholai and Kuntuthoradal. Thus, the article briefly explains about the Kurinji land people, their customs, how they worshipped lord Murugan, their clothing, accessories, the sense of solidarity with relatives, the spirit of living together, chastity, and the development of virtue. All these things strengthen the richness of the Tamil language.

**Keywords:** Tholkappiyam Eluthathikaram, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

ஒரு நாட்டின் மொழியின் வளத்தை அந்நாட்டின் மக்கள் பேசப்படும் மொழயில் எழுந்துள்ள இலக்கியங்களின் செழுமையை வைத்துத்தான் மதிப்பிடப்படுகிறது. அப்படி மதிப்பிடப்படும் இலக்கியங்களில் காணலாகும் கருத்துகள் நிகழ்காலத்தில் வாழும் மக்களுக்குமட்டுமல்லாது எதிர்கால மக்களுக்கும் வாழ்வியல் விழிப்புணர்வு புகட்டும் சிறந்ததொரு ஆசானாய் விளங்கி நிற்கும். அவ்வகையில் மேற்கூறிய தகுதிகள் நிரம்பிய மொழியாக விளங்கும் தமிழில் பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படையானது முருகனிடம் அருள்பெற்ற ஒருவன் முருகனிடம் மற்ற அடியவரை ஆற்றுப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இதில் முருகன் உறையும் அறுபடைவீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமி மலை, பழமுதிர்ச்சோலை, குன்றுதோறாடல் முதலானவற்றைப் பற்றி ஆறு பிரிவாக பாடல்கள் நக்கீரரால் பாடப்பட்டுள்ளது. மேலும், குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு முறை, பற்றற்ற நிலையின் பயன்கள், ஆடை, அணிகலன்கள், முருகனை வழிபடுபவர்களின் செயல்பாடு, கூடி வாழும் மனநிலை, கற்பு, நற்குண மேம்பாடு போன்ற பண்பாட்டு மானுடவியலையும் வாழ்வியலையும் பற்றி இனி இக்கட்டுரையில் நாம் காண்போம்.

1. திருமுருகாற்றுப்படை வழி குறிஞ்சி நில மக்களின் வழிபாட்டு முறை, பற்றற்ற நிலையின் பயன்கள், ஆடை, அணிகலன்கள், முருகனை வழிபடுபவர்களின் செயல்பாடு, கூடி வாழும் மனநிலை, கற்பு, நற்குண மேம்பாடு போன்ற பண்பாட்டு மானுடவியலை அறியலாம்.
2. முருகனை வழிபடும் அடியவர்களின் உளவியல் தன்மை, வழிபாட்டின் தோற்றம் முதலானவற்றை அறிவதற்கு இவ்வாய்வு பயனுள்ளதாக அமையும்.

இன்பம் பெறுக ஆற்றுப்படை நூல்களுக்கான இலக்கணமாக தொல்காப்பியர் கூத்தர், பாணர், பெர்ருநர் விறலியர் முதலானோர் வேந்தர்களிடம் பரிசில் பெற்று வரும்வழியில் தன்னைப் போன்ற வறியவர்களிடம் தான் பெற்ற வளத்தையும், பெற்ற விதத்தையும் கூறி நீயும் இவ்வாறு அவ்வேந்தனிடம் சென்று பயன் பெறுக' என்னும் பாங்கில் அமைந்திருப்பதை

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்"

என்னும் அடிகளில் கூறுகின்றார் (Ilampuranar 2005).

திருமுருகாற்றுப்படையில் முருகனின் தலத்திற்குச் சென்று திருவருள் பெற்ற ஒருவர், தன்னைப் போன்ற அடியவரை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

அச்சம்கொள்ளாமல் சிந்தையுருகி முருகனிடம் சென்றால், 'நீ வீடுபேறு பெற நினைத்து வந்ததை நான் முன்பே அறிவேன் என உன் மேல் அன்புடைய மொழிகள் பலவற்றையும் கூறி உனக்கு வீடுபேறினை வழங்குவான்' என அடியவரை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதை

"அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று

இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து

ஒருநீ யாகித் தோன்ற விழுமிய

பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2016).

## பற்றற்ற நிலையும் அருளும்

வீடுபேறினை அடைவதற்கு தூய உள்ளத்தோடு மெய்யறிவினை எக்காலமும் உணர்ந்து பிறப்பற்ற நிலையை அடைவதற்கு முருகனின் திருவடியைப்பற்றுதல் வேண்டும் என்பதை

"சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு

நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்

செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்

நன்னர் நெஞ்சத்து இன்னசைவ வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2016).

குற்றம் செய்து திருந்தியவரை மன்னித்து ஏற்பதை

"உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்'

என்னும் அடிகளிலும் (Kathir Murugu, 2016)

குற்றம் இல்லாத தவத்தை ஒழுகுபவர்களுக்கு அருளும் விதத்தை

“தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்”

என்னும் அடிகளிலும்

“நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்”

என்னும் அடிகளிலும் காணலாம் (Kathir Murugu, 2016).

## வழிபாடு

மக்கள் அனைவரும் தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கு நன்மை விளையவே விரும்புவர் என்பதை

“பெருந்தண் கணவீரம் நறுந்தண் மாலை

துணையுற அறுத்துத் தூங்க நாற்றி

நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி”

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2016).

“அவ்வியல்பே கடவுள் நம்பிக்கைக்கு ஏற்ற காரணம் எனலாம். நன்மை பயப்பனவற்றையெல்லாம் வாழ்த்தி வணங்கி வழிபாடு செய்தல் இதற்குச்சான்றாகும். நிலம், நீர், தீ, காற்று, கல்வி, செல்வம், வெற்றி முதலியவற்றை முறையே நிலமகள், நீர் மகள், தீக்கடவுள், கொற்றவை எனத் தெய்வமாகக் கொண்டு வாழ்த்தி வணங்கி வழிபடுதல் அவை நன்மை பயத்தல் கருதியேயாகும்” (Pulavar Kulanthai, 2012).

பத்துப்பாட்டிற்கு கடவுள் வாழ்த்தாய் முதன்மை வாழ்த்தாய் அமைந்துள்ள திருமுருகாற்றுப்படை கடவுள் பற்றியும் அவன் தன் அடியவர்களுக்கு காட்டும் திருமுகத்தையும் உயிர்பலி கொடுத்தலையும், வெறியாட்டினைப் பற்றியும் காணலாம். அவன் உறையும் இடம்பற்றி

“சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு”

“தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன்”

“குன்றுதொறாடலும் நின்றதன் பண்பே”

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2016).

இயற்கையோடு இயைந்து வாழும் மக்கள் தான் காணும் ஒவ்வொரு பொருள் அல்லது இயற்கை நிகழ்வு ஒவ்வொன்றிலும் கடவுளைப் பொருத்திப் பார்க்கும் மனநிலை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்வகையில் வேலன் உருவாக்கிய வெறியாடும் இடத்திலும் நாட்டிலும், சோலையிலும், அழகு வீற்றிருக்கும் நீர் வளம் நிலவளம் பொருந்திய தாவரங்களிலும், ஆற்றிலும், குளத்திலும், நான்கு தெரு கூடும் இடத்திலும், மூன்று தெரு கூடும் இடத்திலும், ஐந்து தெரு கூடும் இடத்திலும், புதிய மலர்கள் மலர்ந்திருக்கு கடம்ப மரத்திலும் ஊர் பொது இடங்களிலும், அருள் தரும் குறிகள் நடப்பட்ட இடங்களிலும் வீற்றுள்ளான் என்பதை

“வேலன் தைஇய வெறியயர் களனும்

காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்

யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்

சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"

என்னும் அடிகளில் காணலாம் (Kathir Murugu, 2016).

## பண்பாடு

பண்பாட்டினைப் 'பொருள்சார் பண்பாடு, பொருள் சாராப் பண்பாடு' என இரு வகையாக பிரிக்கலாம் (Bhakvatchala Bharathi, 2012).

மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடக்கப்படுகிறது. இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள், போர்க்கருவிகள் முதலானவை பொருள்சார் பண்பாட்டைச் சார்ந்தவையாகும். திருமுருகாற்றுப்படையில் உடைகள், அணிகலன்கள், போர்க்கருவிகள் தொடர்பான பொருள்சார் பண்பாட்டினை,

"கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடி"

"கோபத்தன்ன தோயாப் பூந்துகில்"

"நலம்பெறும கலிங்கத்துக் குறங்கின்மிசை"

"கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொடப ஒருவகை"

"சீரை தைஇய உடுக்கையர் சீரொடு"

"நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்"

"பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்"

"செய்யன் சிவந்த ஆடையன்"

"கச்சினன் சுழலினன் செச்சைக் கண்ணியன்"

"கொடியன் நெடியன் தொடியணி தோளன்"

என்னும் அடிகளில் காணலாம்.

"பொருள்சாரா பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். இக்கூறுகள் மனதளவில் உணரக் கூடியதாய், எளிதில் புரிந்துகொள்ளக்கூடியனவாக உள்ளதால் அவை மானுடவியல் வழக்கில் மனவடிவங்கள் என்றும் கூறப்பெறும்" (Bhakvatchala Bharathi, 2012).

பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பாடல்கள், நடனம், உணவு உண்ணும் முறை, வணங்கும் முறை, மந்திரங்கள் வழிபாட்டு முறைகள், முதலானவை இதில் அடங்கும். பொருள்சாரா பண்பாட்டினை திருமுருகாற்றுப்படையில் முருகன் வீற்றிருக்கும் அனைத்து இடங்களிலும் சிறிய தினை அரிசியைப் பூக்களுடன் கலந்து பரப்பி வைத்த அரிசியுடன் ஆடு அறுத்துக் கோழிக் கொடியை உயர்த்தி வழா எடுத்து மகிழ்ந்ததை

"சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து

வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ

ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்" (Kathir Murugu, 2016)

என்னும் அடிகளிலும், இரண்டு ஆடைகளை உடுத்திக்கொண்டு, செந்நிறக்காப்பினைக் கட்டிக்கொண்டு வெண்மை நிறமான பொரியினைத் தூவி, வலிமையான பெரிய கால்களையுடைய கொழுத்த கிடாயின் இரத்தத்துடன் பிசைந்த தூய வெண்மையான அரிசியைப் பலியாகத் தூவி முருகனை வழிபட்டதை,

"முரண்கொள் உருவின் ஈருண்டுடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி

மதவலி நிலைஇய மாத்தட் கொழுவிடைக்

குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி

சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்" (Kathir Murugu, 2016)

என்னும் அடிகளிலும்

முருகனை வணங்க வேண்டிய முறைமையாக, முருகனைக் காண நேர்ந்தால் முகத்தால் இனிமையாக விரும்பிப் பார்த்து, வாயினால் புகழ்ந்து வாழ்த்திக் கையைத் தலைமேல் குவித்துத் தொழுது வணங்கி அவனுடைய திருவடியில் விழுந்து வணங்குதல் வேண்டும் என்பதை

'ஆண்டாண்டாயினும் ஆகக் காண்டக

முந்துநீ கண்டுழி முகனமர்ந்து ஏத்திக்

கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி'

என்னும் அடிகளிலும் காணலாம் (Kathir Murugu, 2016).

## அறமும் குற்றமும்

தான் அறிந்தோ அறியாமலோ செய்த தவறுகளை உணர்ந்து, மன்னிப்பு கோரும் மனப்பான்மையுடன் தன்னிடம் பக்தியுடன் வருபவர்களை மன்னித்து, அவர்களுக்கு மேலும் துன்பங்கள் வந்து சேராமல் காத்து அருள் செய்யும் பாங்கினை

'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்'

என்னும் அடியில் காணலாம் (Kathir Murugu, 2016).

## கற்பு

கற்பு என்னும் சொல் தமிழர் பண்பாட்டின் கூறுகளில் ஒன்றாகும். "பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி" (Bhakvatchala Bharathi, 2012).

அவ்வகையில் தமிழர் வாழ்வியலில் நன்னெறி வாழ்விற்காக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட சொல் கற்பு ஆகும். இச்சொல்லானது மகளிருக்கு மட்டுமே உரித்தானதாய் முத்திரை குத்தப்பட்டு இன்று வரை பயன்பாட்டில் உள்ளது. திருமுருகாற்றுப்படையிலும்

'மறுவில் கற்பின் வாணுதல் கணவன்'

'மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்'

'தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்'

என்னும் அடிகளில் கற்பு பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளது (Kathir Murugu, 2016). 'மறுவில் கற்பின்', 'மாசின் மகளிரொடு', 'தாவில் கொள்கை மடந்தை' என்னும் சொற்கள் கற்பையே முன்னிறுத்துகிறது.

கற்பு பற்றி வள்ளுவரும் அறத்துப்பாலில் பெண்களுக்கே உரித்தான கற்பினைப் பற்றிக் கூறியிருப்பதை

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெண்ணும்

திண்மை உண்டாகப் பெறின்'

என்னும் குறளில் காணலாம் (Parimelalhagar, 2016).

## ஒற்றுமையும் உறவுகளும்

மனிதன் தோன்றிய காலத்தில் இயற்கை உணவை உண்டு நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டு கூட்டம் கூட்டமாய் இனக்குழுவாக வாழ முற்படும்போது தனக்கான உணவுத் தேடலைத் தொடர்ந்து மேற்கொண்டு செய்தாலும் தன் இனத்தாருக்கும் உணவைப் பகிர்ந்து தானும் உண்டு வாழ்ந்துள்ளான். இம்மனநிலையானது ஒற்றுமையின் உறவுப் பாலமாய் அமைந்திருப்பதை உணரலாம்.

மலையில் விளைந்த நறுமணம் வீசும் சந்தனத்தை மார்பில் பூசிய குறவர்கள் மூங்கில் பக்குவமாகத் தேனை ஊற்றிச்செய்த கள்ளினை உறவினர்களோடு பகிர்ந்துண்டு, மகிழ்ச்சியுடன் தொண்டகப்பறை முழங்கி, ஆரவாரத்துடன் தாளத்திற்கேற்ப ஆடியதை,

"கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்

நீடமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து

தோண்டகச் சிறுபறைக் குரவை அயர"

என்னும் அடிகளிலும் காணலாம் (Kathir Murugu, 2016).

## முடிவுரை

தமிழ் மொழியில் எழுந்துள்ள இலக்கியங்கள் தொன்மைத் தமிழர்களின் வாழ்வியலைத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது. மானுடவியல் துறைக்கு மகத்தான வாழ்வியல் தத்துவப் புதையலாய்த் தமிழ்மொழி இலக்கியங்கள் விளங்குகின்றன. திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானிடம் அருள்பெற்று வரும் அடியவர் தன்னைப் போன்று மற்றவரையும் முருக பெருமானிடம் அருள் பெறட்டும் என்னும் நோக்கில் அடியவர்களின் பற்றற்ற நிலையினால் விளையும் பயன், தமிழர் பண்பாட்டுக் கூறுகள், முருகனை வழிபடும் விதம், அடியவர் குற்றம் நீங்கிய மனம், கற்பு நிலை, உறவினர்களோடு ஒற்றுமையுணர்வு முதலான மானுடவியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு தமிழ் மொழியின் வளத்திற்கு வலிமை சேர்ப்பதை இதுவரை இக்கட்டுரையில் நாம் கண்டோம்.

## References

Bhakvatchala Bharathi, (2012) Panpattu Manudaviyal, Meiyappan Pathippagam, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Kathir Murugu, (2016) Pathupattu moolamum uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Pulavar Kulanthai, (2012) Tholkappiyam kaalathamilar, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License